நடைபெற்றிருக்கிறது, அந்த ஆய்வு அறிக்கை வந்தவுடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். விரைவிலே அந்த அறிக்கையினைப் பெற்று, தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) பரமக்குடி நகர எல்லைக்குள் ஐந்து முனை சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வேகத்தடை வைக்க வேண்டிய அவசியம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய நெடுஞ்சாலை--49--ல் பரமக்குடி நகர எல்லைக்குள் ஐந்து முனை சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஆவதால் அங்கே வேகத்தடை அமைக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எஸ். சுந்தரராஜ், அஜெண்டாவிலே இருப்பதைத்தான் தாங்கள் படிக்க வேண்டும். உயிர்சேதம் ஏற்படுவது பற்றி அதிலே இல்லை. நீங்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வேகத்தடை வைக்க வேண்டிய அவசியம் குறித்து என்றுதான் சொல்லவேண்டும். (குறுக்கீடு) அஜெண்டாவில் இருப்பதைத்தான் படிக்க வேணடும். அமைச்சர் கொடுத்துள்ள அறிக்கையில் இருப்பதைப் படிக்கக் கூடாது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

## அறிக்கை

. தேசிய நெடுஞ்சாலைகளில் நெடுந்தூர வாகனங்கள் இடையூறின்றியும் தாமதம் இன்றியும் நேராக செல்ல வேண்டியிருப்பதால் வேகத்தடை அமைப்பது கூடாது என்று மைய அரசு முடிவு எடுத்து, மைய அரசு தனது கடித எண் பி.எல். *50 (8)/72* நாள் *6-6-1976* மற்றும் நாள் *25-4-1978*ல் தேசிய நெடுஞ்சாலைகளில் வேகத்தடை அமைக்க தடை விதித்துள்ளது. எனவே தேசிய நெடுஞ்சாலை எண் *49*ல் பரமக்குடி எல்லைக்குள் ஐந்து முனை சந்திப்பில் வேகத்தடை அமைப்பதற்கு இயலாது. எனினும் விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு வாகனப்போக்குவரத்தை கட்டுப்படுத்தும் வகையில் சிறு சிறு தடுப்புக்களை (Rumble Strips) ஓட்டுநரை எச்சரிக்கும் விதத்தில் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை-*49* பகுதியில் அமைக்கலாம் எனக் கருதப்படுகிறது.

முற்பகல் *11-25*

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே, தேசிய நெடுஞ்சாலையில் வேகத் தடை அமைப்பதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளதாகவும், ஓட்டுநரை எச்சரிக்கும் வகையில் அங்கே 'ரம்பிள் ஸ்டிரிப்ஸ்' அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்கள். இன்றையதினம் மின்னல் வேகத்தில் செயல்படுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அங்கே வேகத்தடை அமைப்பதற்குப் பதிலாக சிறு சிறு தடுப்புகள் அமைக்கப்படவிருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் ஓட்டுநர்களை எச்சரிப்பதற்கான அறிவிப்புப் பலகைகள் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்க முடிகிறது. ஆகவே, ஓட்டுநர்களை எச்சரிக்கின்ற வகையில், வேகத்தடை போர்டுகள் வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறபடி தேசிய நெடுஞ்சாலையிலே வேகத்தடை அமைக்க மத்திய அரசினுடைய தடையுத்தரவு மற்றும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும், போக்குவரத்து நிலையினைக் கட்டுப்படுத்துவதற்குச் சில இடங்களில் 'ரம்பிள் ஸ்டிரிப்ஸ்' என்று சொல்லப்படுகின்ற சிறு சிறு தடுப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அதுபோலத்தான் பரமக்குடியிலும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், போக்குவரத்து வசதியை முன்னிட்டு அங்கே

நடைபெறுகின்ற விபத்துக்களைத் தடுக்கும்பொருட்டு வேகத்தடை போர்டுகள் வைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுசம்பந்தமாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகர எலலைக்குள் ஆட்கள் நடமாட்டம் அதிகமுள்ள சினிமா தியேட்டர், கல்வி ஸ்தாபனம் மற்றும் அரசு மருத்துவமனைகள் அந்த தேசிய நெடுஞ்சாலையில்தான் இருக்கின்றன. இவ்வாறு தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற காரத்தினால் அடிக்கடி விபத்துகள் எல்லாம் நடக்கின்றன. அவ்வாறு அந்த விபத்துகள் நடக்காமல் தடுப்பதற்கு அரசு பொதுப் பணித்துறை மூலமாக, நெடுஞ்சாலைத் துறை மூலமாக 'புட் பாத்' அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறத்தா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி நகரத்திலே, நம்முடைய ஆட்சி வருவதற்கு முன்பு, சாலை எப்படி இருந்தது என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அறிவார். அதற்குப் பின்னாலே, அதிகமாக நிதி ஒதுக்கி, இந்த ஆட்சிக் காலத்திலே, நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே, பரமக்குடி நகருக்குள்ளே, அந்த தேசிய நெடுஞ்சாலையை மேம்பாடு செய்தோம் என்பதை உறுப்பினர் மறந்திருக்கமாட்டார். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை, புதியதாக 'புட் பாத்' வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தற்போது, அத்தகைய செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு

### *மானியக் கோரிக்கைகள், 1994-95 - - அவையில் முன்மொழிதல் குறித்து. (ஆ.செ)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1994-95*–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.